DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 416/2019 PW : 3

Name : சி.மணிகண்டன் (துணை வட்டாட்சியர்) Age –

S/o : சின்னப்பன் Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 11.03.2026

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) வழக்கு விவரங்கள் எனக்கு கோப்புகள் வழிலாக தெரியும். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சர்வே எண்.60/3 மற்றும் 60/7ஏ மற்றும் 60/7சி அளப்பதற்காக உத்தரவு பெறப்பட்டது என்றால் சரிதான். நான் அறிக்கை தாக்கல் செய்த பின்பு சர்வே எண்.60/3 மற்றும் 60/7சி தனித்தனியாக வரைப்படம் இல்லை என்று அ.சா.2-ன் விளக்கம் எதுவும் கேட்கவில்லை. சர்வே எண்.60/7சி நெடுஞ்சாலைதுறை பெயரில் இல்லாமல் மனுதாரரின் பெயரில் தான் இன்றுவரை உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நெடுஞ்சாலைதுறை மூலம் கையகப்படுத்திய பின்பு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தற்போது மேற்சொன்ன பட்டாக்கள் யார் பெரியல் மாறியுள்ளத என்பது எனக்கு தெரியாது. குறிப்பிட்டு டவுன் சர்வேக்கு மேற்படி சர்வே எண்கள் எப்போது மாற்றப்பட்டது என்பது எனக்கு தெரியாது. சுமார் 2 1/2ஆண்டுகளாக அதே இடத்தில் துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். அங்கு உள்ள கட்டுமான உரிமையாளர்கள் பெயர்கள் நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். வரைப்படத்தை வைத்து அறிக்கை நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.த.சா.ஆ.42 எனக்கு வழங்கப்பட்ட அதிகார கடிதம் ஆகும்

அறிக்கை என குறிப்பிட்டிருந்தால் அது தவறு. அந்த அறிக்கையை இந்த வழக்கில் தாக்கல் செய்யாததால் வரைப்படம் சம்மந்தமாக ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. இந்த வரைப்படத்தில் உண்மைதன்மை இல்லாததால் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.03.11 14:59:13 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 416/2019 PW : 2

Name : சந்திரசேகர் Age –

S/o : சித்திரவேல் Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

Date: 11.03.2026

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) 1ம் வாதி எங்கள் மீது WP No.10220/2009–ல் contempt எங்கள் அலுவலகத்திற்கு எதிராக CMP No.609/2010 தாக்கல் செய்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவர் மறுபடியும் WP No.25497/2018 தாக்கல் செய்துளளார் என்றால் சரிதான். அதன் படி தான் சர்வே எண.60/3 மற்றும் 60/7 ஆகியவற்றை சர்வே செய்தேன் என்றால் சரிதான். அளப்பதற்கு முன்பு இரு தரப்பினர்களுக்கு நான் தனிப்பட்ட முறையில் அறிவிப்பு அனுப்பவில்லை. இரண்டு தரப்பினர்களும் இல்லாததால் நான் சரிவர அடையாளம் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வட்டாட்சியர் கொடுத்த குறிப்பாணை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. குறிப்பாணை தாக்கல் செய்த பின்பு தான் அளக்க சென்றேன் ஆனால் நான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வட்டாட்சியர் எனக்கு வழங்கிய குறிப்பாணையில் சர்வே எண்.60/3 மற்றும் 60/7ஏ மற்றும் 60/7சி ஆகியவற்றை அளக்க சொன்னார் அதன்படி தான் அளந்தேன். சர்வே எண்.60/7ஏ–ல் இரண்டு Aers உள்ளது என்று நான் குறிப்பிட்டுள்ளேன். சிட்டா, அடங்கல் பார்த்து தான் குறிப்பிட்டுள்ளேன். சர்வே எண்.60/7ஏ–ற்கு தனியாக FMB கிடையாது சர்வே எண்.60–க்கு மட்டும் தான் உள்ளது.

2) சர்வே எண்.60/7ஏ–விற்கு மட்டும் தான் நான்கு எல்லைகள்

குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய வரைப்படத்தில் நான்கு பக்கத்தின் எல்லைகள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.60/3 மற்றும் 60/7ஏ ஆகியவற்றின் சர்வே கல் எங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று என்னுடைய வரைப்படத்தில் செல்லவில்லை என்றால் எல்லா இடத்திலும் சர்வே கல் இருப்பதில்லை. பழைய ஆவணங்களை வைத்து தான் நாங்கள் சர்வே செய்தோம். நீல அகலம் குறித்த விவரங்கள் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல வரைப்படத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். நான் வரைப்படத்தின் அடிப்படையில் தான் வடக்கு தெற்கு ஆகிய விவரங்கள் குறிப்பிட்டுள்ளேன். தனியாக சொல்லவில்லை. சர்வே எண்.60/7ஏ–ல் 41 சதுர மீட்டர் வீடு யாருடையது என்று அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த கட்டுமானத்தின் தொடர்ச்சி சர்வே எண்.60/3–லும் உள்ளது என்று நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். உயர்நீதிமன்ற உத்தரவு படி சர்வே எண்.60/3, சர்வே எண்.60/7ஏ மற்றும் சர்வே எண்.60/7சி ஆகியவற்றை அளக்கும்படி சொன்னார்கள். ஆனால் மனுதாரருக்கு சொந்தமான இடம் சர்வே எண்.60/7ஏ மற்றும் சர்வே எண்.60/7சி. சர்வே எண்.60/7ஏ–க்கு தான் வரைப்படம வரைந்தேன். நான் சொல்வதுதவறு என்றாலும் உயர் நீதிமன்றத்தின் உத்தரவு மூன்று சர்வே எண்களுக்கு வரைபடம் வரைந்திருக்க வேண்டும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

3) நான் 60/3–ல் 41 சதுர மீட்டர் விடு உள்ளதால் தான் அதன் வரைப்படம் வரையவில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.60/7ஏ–ல் நான் குறிப்பிட்டுள்ள கடைகளின் உரிமையாளர் யார் என்றும், அந்த கட்டிடத்தின் நீல அகலம் நான்குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான் வரைப்படத்தில் சொல்லியுள்ளேன். 60/7ஏ–ல் 50 சதுர மீட்டார் நெடுஞ்சாலைதுறை எடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். எங்களுடைய கோப்புகளில் 60/7 எப்போது 60/7ஏ, பி, சி என்று உட்பிரிவு செய்யப்பட்டது என்று அறிக்கையில் சொல்லவில்லை என்றால் எனக்கு அளந்து கொடுக்க மட்டும் தான் உத்தரவு விடப்பட்டிருந்து. அந் சமத்யதில் உள்ள 60/7ஏ–ன்

பட்டாவை தான் நான் பார்த்தேன் அதற்கு முந்தைய பட்டா பார்ககவில்லை. 60/7பி நான் சர்வே செய்யும் போது ரோடாக இருந்தது அந்த விவரத்தை நான் வரைப்படத்தில் காண்பிக்கவில்லை. சர்வே எண்.60/7பி தற்போது எனக்கு தெரியாது நான் அந்த இடத்தில் இல்லை. 60/3–ற்கு சொல்வதற்கு 60/7ஏ தான் வழி என்று நான் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். நான் physical–லாக இருக்கும் இடத்தை வைத்து தான் வரைப்படம் வரைந்துள்ளேன். பின்பக்கம் உள்ள பிளாட்டிற்கு செல்வதற்காக நிலம என்பதால் நான் பொது வழியாக காண்பித்துளளேன். என்னுடைய வரைப்படத்தில் 60/7சி நெஞ்சாலையிடம் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன். அதற்கு தனியாக வரைப்படம் வரையில்லை. 60/7சி அதே பட்டாதாரர் பெயரில் தான் உள்ளது. நெஞ்சாலைதுறைக்கு அது ஏன் மாறிவில்லை என்பது எனக்கு தெரியாது. அந்த சமத்யதில் ஒவ்வொரு உட்பிரிவுக்கும் தனிப்பட்ட FMB Sketch கிடையாது இப்போது தான் உள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும் அப்போது FMB உள்ளது என்றாலும் நான் சரிவர பார்க்காமல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. FMB இல்லாத இடத்திற்கு நான் சர்வே Fix செய்தேன் என்றாலும் இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சரிவர கோப்புகளை பார்க்காமலும் உயர்நீதிமன்ற உத்தரவுகளை இணங்க அவசரமாக அளந்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.03.11 14:59:21 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.